RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-85 | 02 ஏப்ரல் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## "அதிமுக, பாஜக மற்றும் தவெக இடையே இரண்டாம் இடத்துக்குத்தான் போட்டி" திருமாவளவன்

சென்னை, ஏப்.2

சென்னை விமான நிலையத்தில் விசிக தலைவர் திருமாவளவன் இன்று (ஏப்.1) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், 2026ல் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா, தனது சமூக ஊடகங்களில் தொடர்ந்து பதிவு செய்து வருவது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "வட இந்தியாவில் ஏதாவது ஒரு மாநிலத்திலே வரும் என்ற எண்ணத்தில் அமித்ஷா கூறியிருப்பார். தமிழகத்தில் அதற்கான வாய்ப்பே இல்லை என்பது அவருக்கேத் தெரியும்.

இன்னும் எதிர்க்கட்சிகள் தமிழகத்தில் உறுதியான எந்த நிலைப்பாட்டையும் எடுக்கமுடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. அதிமுகவும் இன்னும் ஒரு அணியை உருவாக்கவில்லை. பாஜகவும் இன்னும் ஒரு அணியை உருவாக்க முடியவில்லை. புதிதாக கட்சித் தொடங்கியிருக்கிற நடிகர் விஜய்யும் ஒரு உறுதியா



நிலைப்பாட்டை எடுத்ததாக தெரியவில்லை.

அண்மையில் நடந்த தவெக முதல் பொதுக்குழுக் கூட்டத்தில் அவர் பேசியபோது, அதிமுகபாஜக தமிழகத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக இருக்க முடியாது. தவெகதான் இரண்டாவது பெரிய கட்சி என்றே கூறியுள்ளார். எனவே, பாஜக, அதிமுக மற்றும் தவெக ஆகிய கட்சிகளுக்கிடையே தமிழகத்தில் இரண்டாவது பெரிய கட்சி யார் என்பதில் தான் போட்டி நடந்துகொண்டிருக்கிறது. இந்தச்சூழலில் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும் என்பது நகைச்சுவையாக இருக்கிறது" என்று அவர் கூறினார்.

மேலும், "மகராஷ்டிரா மாநிலத்தை வட இந்தியாவோடு பார்ப்பதில்லை. அதுவும் கிட்டத்தட்ட தென்னிந்தியாவோடுதான் இருக்கிறது. தாய்மொழி உணர்வு இப்போதுதான் தமிழகத்தைத் தாண்டி பலருக்கும் உருவாகி வருகிறது. இந்தி திணிப்பை அவர்கள் இதுவரை ஒரு எதிரான நடவடிக்கையாகவே பார்க்காமல் இருந்துவிட்டனர். அதனால், வடஇந்தியாவில் பூர்வக்குடி மக்கள் பேசிய பல மொழிகள் அழிந்துப் போயிருக்கின்றன.

ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில்கூட தங்களது தாய்மொழி இந்தியால் அழிக்கப்பட்டுவிட்டது என்று, சட்டமன்றத்திலேயே பேசக்கூடிய அளவுக்கு தற்போது மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கிறன. இதற்கெல்லாம் தமிழகம்தான் ஒரு முன்னோடி மாநிலமாக இருக்கிறது என்பதை, இப்போது வெவ்வேறு மாநிங்களில் உள்ள மக்களுக்குப் புரியத் தொடங்கியிருக்கிறது." என்றார்.

## மானாமதுரையில் 200 வருட ஆலமரம் வேரோடு சாய்ந்தது! பக்தர்கள் வேதனை

மானாமதுரை ஏப்.2

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை எல்லையில் (மதுரை ராமேஸ்வரம்) தேசிய நெடுஞ்சாலையில் காவல் தெய்வமாக வழிபட்டு வரும் அருள்மிகு தர்ம முனீஸ்வரர் கோவில் 200 வருடத்திற்கு மேலான பழமையான அரசமரம் நேற்று இரவு 12.10 மணியளவில் வேரோடு சாய்ந்தது இது பக்தர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மரம் சாய்ந்து விழுந்த நேரத்தில் எந்த விதமான போக்குவரத்து பாதிப்போ !உயிர்ச்சேதமோ !ஏற்படவில்லை இது தெய்வத்தின் மகிமையே என்ற பக்தர்கள் கூறினார். உடனடியாக தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விழுந்து முறிவு ஏற்பட்ட மரத்தினை அகற்று பணியில் பக்தர்கள் ஈடுபட்டனர். சூலம் ஆயுதம் வடிவில் ஆலமரத்தடியில் உள்ள இறைவனை பக்தர்கள் வாகன ஓட்டுனர்கள் வியாபாரிகள் என்று பல்வேறு தரப்பினர்களும் வழிபடுவது வழக்கமாகும் இது தவிர கர்ப்பிணி பெண்களுக்கு தங்களுடைய குழந்தை ஆரோக்கியமாகவும் பிறக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றனர் குழந்தைகள் பிறந்த பின் முதலில் இங்கு வழிபாடு செய்த பின் வேறு கோயில்கள் செல்லும் வழக்கம் உள்ளது புதிய வாகனங்கள் வாங்குவோர் இந்த ஆலமரத்து முனீஸ்வரரை வணங்கி அர்ச்சனை செய்து விட்டு செல்கின்றன இதனால் வாகன விபத்துக்கள் போன்றவைகளில் இருந்து முனீஸ்வரர் காப்பதாக பக்தர்கள் கூறுகின்றனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு மதுரை ராமேஸ்வரம் நான்கு வழி சாலை அமைக்க முடிவு செய்யப்பட்டபோது சாலையின் வரைபடத்தின் படி தர்ம முனிஸ்வரர் ஆலயத்தை







அகற்ற முடிவு செய்து ஜேசிபி மற்றும் கிரேன்கள் உதவியுடன் பலமுறை முயற்சி செய்தனர் ஆனால் அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தது மரத்தை அகற்ற முடியாமல் தொடர்ச்சியாக வாகனங்கள் பழுது அடைந்த வண்ணமாய் இருந்தது மரத்தை அகற்றும் முடிவை கைவிட்டு புதியதாக மரத்தின் இரு பகுதியில் ரோடு அமையும் படி வரைபடம் தயார் செய்து நான்கு வழி சாலையை அமைத்தனர் இந்தியாவிலேயே நான்கு வழிச்சாலையில் அகற்ற முடியாத ஆலமரம் என்ற வழிபாட்டுத்தலமாக இந்த அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## மத்திய அரசின் வழக்கறிஞராக சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் முத்தரசு நியமனம்

மத்திய அரசின் வழக்கறிஞராக சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் முத்தரசு தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த பொறுப்பு கிடைத்ததற்கு அயராத உழைப்புநேர்மைக்கும் கிடைத்த வெற்றியாகவே கருதப்படுகிறது. மத்திய அரசின் வழக்கறிஞராக நியமிக்கப்பட்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் முத்தரசுவை பாரத் இந்து முன்னணி தலைவர் ஆர்.டி



.பிரபு, செல்வம், சதீஷ், யுவராஜ் பாஸ்கர் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். மேலும், சக வழக்கறிஞர்களும் பாராட்டுகளை தெரிவித்தனர். மாலைதந்தி ஆசிரியர் ஆ.பொன்ராஜ், செய்தி ஆசிரியர், மா.முத்துராஜா மற்றும் மாலைதந்தி நாளிதழின் குழுமம் வாயிலாக மத்திய அரசிற்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்


## 'டாஸ்மாக் சோதனைக்கு எதிரான தமிழக அரசின் வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்க' அமலாக்கத் துறை மனு

சென்னை, ஏப்.2

அமலாக்க துறையின் சட்டப்பூர்வமான விசாரணையை சீர்குலைக்கும் வகையில், முன்கூட்டியே தமிழக அரசு தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல. சோதனைக்கு எதிராக அமலாக்கத் துறையிடம் முறையிடும் மாற்று வாய்ப்பு உள்ள போதும், அதை அணுகி நிவாரணம் கோராமல் நேரடியாக உயர் நீதிமன்றத்தை நாடியது தவறு. எனவே, இந்த வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும், என டாஸ்மாக் நிறுவனத்தில் நடத்திய சோதனைக்கு எதிராக தமிழக அரசு தொடர்ந்துள்ள வழக்கில், அமலாக்கத் துறை பதில்மனு தாக்கல் செய்துள்ளது.

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை சோதனை நடத்திய அமலாக்கத் துறை, டாஸ்மாக் நிறுவனத்துக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்தது, பார் உரிமம் வழங்கியது, மதுபானங்களை மதுபான கடைகளுக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு டெண்டர் வழங்கியது உள்ளிட்டவற்றில் 1000 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாக அறிக்கை வெளியிட்டது.

அமலாக்கத் துறையின் இந்த சோதனையை அரசியலமைப்பு சட்டத்தின் கூட்டாட்சி கட்டமைப்புக்கு விரோதமானது என அறிவிக்கக் கோரியும், அரசு அனுமதியின்றி நடத்தப்பட்ட சோதனையை சட்டவிரோதனானது என அறிவிக்க கோரியும், விசாரணை என்ற பெயரில் டாஸ்மாக் அதிகாரிகளை



துன்புறுத்தக் கூடாது என அமலாக்கத் துறைக்கு உத்தரவிடக் கோரி தமிழக உள்துறை செயலாளரும், டாஸ்மாக் நிர்வாக இயக்குநரும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதிகள் எம் எஸ் ரமேஷ் மற்றும் என் செந்தில்குமார் அடங்கிய அமர்வு விசாரணையில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். இதையடுத்து இந்த வழக்கு நீதிபதிகள் எஸ் எம் சுப்பிரமணியம் மற்றும் கே.ராஜசேகர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அமலாக்கத் துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், "அமலாக்க துறையின் சட்டப்பூர்வமான விசாரணையை சீர்குலைக்கும் வகையில், முன்கூட்டியே தமிழக அரசு தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல. சோதனை நடத்துவதற்கான வாரண்டை காட்டி, வலுக்காட்டாயமாக கையெழுத்து பெற்றதாக தமிழக அரசு கூறிய குற்றச்சாட்டு ஏற்புடையது அல்ல. சோதனைக்காக வாராண்டை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

சோதனைக்கு எதிராக அமலாக்கத் துறையிடம் முறையிடும் மாற்று வாய்ப்பு உள்ள போதும், அதை அணுகி நிவாரணம் கோராமல் நேரடியாக உயர் நீதிமன்றத்தை நாடியது தவறு. டாஸ்மாக்கில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறை பதிவுசெய்த வழக்குகளின் அடிப்படையில் மட்டுமே சோதனை நடத்தப்பட்டது. எந்த ஆதாரங்களும் இல்லாமல் சோதனை நடத்தவில்லை.

சோதனையின் போது அதிகாரிகள் உணவருந்த, ஓய்வெடுக்க அனுமதி வழங்கிய பிறகே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. டாஸ்மாக் அதிகாரிகளின் சுதந்திரத்தை மீறியதாக டாஸ்மாக் நிர்வாகம் வழக்கு தொடர முடியாது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தான் வழக்கு தொடர முடியும்.

பெண் அதிகாரிகள் பாதுகாப்பான முறையில் தான் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஆதாரங்களை சேகரிப்பதற்காக மட்டுமே அதிகாரிகளின் செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன. சட்டபூர்வமான சோதனையை முடக்கும் நோக்கில், சட்டவிரோதமாக சிறை பிடித்ததாகவும், துன்புறுத்தியதாகவும் குற்றச்சாட்டுகளை கூறி தமிழக அரசு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது. எனவே, இந்த வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும்." என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர், "60 மணி நேரம் சோதனை நடத்தி பெண் அதிகாரிகளை நள்ளிரவு வரை சிறை பிடித்துள்ளனர். இது மனித உரிமை மீறல் . அமலாக்கத்துறை தாக்கல் செய்துள்ள பதில் மனுவுக்கு பதில் அளிக்க அவகாசம் வழங்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், "தமிழக காவல்துறை சோதனை நடத்தியது இல்லையா?" என கேள்வி எழுப்பினர். அதற்கு, "நள்ளிரவில் சோதனை நடத்தியதில்லை" என தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் பதில் அளித்தார். அப்போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், "தமிழக அரசின் மனு விசாரணைக்கு உகந்தது அல்ல" என தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து தமிழக அரசின் கோரிக்கையை ஏற்ற நீதிபதிகள், அமலாக்கத் துறை பதில் மனுவுக்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு காலஅவகாசம் வழங்கி, வழக்கு விசாரணையை ஏப்ரல் 8ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## 'பாஜக அனைத்திலும் தலையிட்டு கட்டுப்படுத்த விரும்புகிறது' வக்பு திருத்த மசோதாவுக்கு அகிலேஷ் எதிர்ப்பு

புதுடெல்லி, ஏப்.2

வக்பு திருத்த மசோதாவுக்கு தனகு கடுமையான எதிர்ப்பினை தெரிவித்துள்ள சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், பாஜக அனைத்து விஷயங்களிலும் தலையிட்டு, அவைகளை கட்டுப்படுத்த விரும்புகிறது என்று சாடியுள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அகிலேஷ் கூறுகையில், "வக்பு திருத்த மசோதாவை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம், ஏனெனில் பாரதிய ஜனதா கட்சி அனைத்து விஷயங்களிலும் தலையிட விரும்புகிறது. எல்லா இடங்களையும் அவர்கள் கட்டுப்படுத்த விரும்புகிறார்கள். அது ஜிஎஸ்டி, பணமதிப்பிழப்பு அல்லது வேறு எந்த முடிவாக இருந்தாலும் சரி, அவர்கள் (பாஜக) மற்றவர்களிடமிருந்து அல்லது மக்களிடமிருந்து ஏதாவது ஒன்றைப் பறிக்கவே விரும்புகிறார்கள். எதிர்க்கட்சிகள் சமாதான அரசியலில் ஈடுபடுகிறோம் என்று பாஜக குற்றம்சாட்டுகிறார்கள்.




ரமலான் பண்டிகையின் போது அவர்கள் பரிசுப் பெட்டகங்களைக் கொடுத்தது சமாதான அரசியல் இல்லையா? இதுவரை இந்துக்களைத் தவறாக வழிநடத்திவரும் பாஜக, இப்போது முஸ்லிம்களையும் தவறாக வழிநடத்த ஆரம்பித்திருக்கிறது." என்றார். மேலும் வக்பு திருத்த மசோதாவுக்கு அஜ்மீர் தர்கா ஆதரவு தெரிவித்திருப்பது குறித்த கேள்விக்கு பதில் அளித்த அகிலேஷ், "பாஜகாவல் யாரையும் அவர்களுக்கு சாதகமாக பேசவைக்க முடியும், செயல்படவைக்க முடியும் அது அவர்களின் சாதனை" என்றார்.

முன்னதாக, சூஃபி சஜ்ஜதன்ஷின் கவுன்சிலின் (ஏஐஎஸ்எஸ்சி) தலைவரும், ராஜஸ்தானின் அஜ்மீர் தர்காவின் மதத்தலைவருமான சையித் நஸ்ருத்தின் சிஷ்டி திங்கள்கிழமை கூறுகையில், "இந்திய அரசு கொண்டுவரும் வக்பு திருத்த மசோதா ஏற்கனவே அதன் நோக்கத்தை வெளிப்படுத்தி இருக்கிறது. நாடாளுமன்ற கூட்டுக்குழு அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் பொறுமையாக கேட்ட பின்பு அரசுக்கு அறிக்கை அளித்துள்ளது.

வரவிருக்கம் மசோதா நன்மைபயக்கும் என நான் நம்புகிறேன். தற்போது இருக்கும் வக்பு சட்டம் மாற்றப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன். ஆனால் அதற்காக யாரும் அச்சப்படவேண்டியதில்லை. நாம் அதிகாரபூர்வமான அறிக்கைகளையே நம்ப வேண்டும். உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது தவறானது." என்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே, அஜ்மீர் தர்கா தலைவரின் கருத்துக்கு எதிர்வினையாற்றியுள்ள காங்கிரஸ் எம்.பி.யும், நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் உறுப்பினருமான இம்ரான் மஸ்தூத், "பாஜக இந்த தரகு வேலையை நிறுத்த வேண்டும்" என்று சாடியுள்ளார்.

## "இடதுசாரி தீவிரவாத மாவட்டங்களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைந்துள்ளது" அமித் ஷா

புதுடெல்லி, ஏப்.2

"நாட்டில் இடதுசாரி தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 12ல் இருந்து 6 ஆக குறைக்கப்பட்டுள்ளது. மார்ச் 31, 2026க்குள், இந்தியா 100% நக்சலைட் இல்லாததாக மாறும்." என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "இன்று நமது நாடு ஒரு புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. நக்சல் இல்லாத பாரதத்தை உருவாக்குவதற்கான ஒரு பெரிய முன்னேற்றமாக, இடதுசாரி தீவிரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை 12 இல் இருந்து வெறும் 6 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், மோடி அரசாங்கம் நக்சலிசத்தை இரக்கமற்ற அணுகுமுறையுடனும், பரவலான வளர்ச்சிக்கு இடைவிடாத முயற்சிகளுடனும் வலுவான, பாதுகாப்பான மற்றும் வளமான பாரதத்தை உருவாக்கி வருகிறது. 2026 மார்ச் 31 ஆம் தேதிக்குள் நக்சலிசத்தை நிரந்தரமாக ஒழிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது," என்று



தெரிவித்துள்ளார்.

அமித் ஷாவின் பதிவை டேக் செய்து பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி வெளியிட்டுள்ள பதிவில், "பிரதமர் நரேந்திர மோடியின் வலுவான தலைமை மற்றும் உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் திறமையான செயல்பாடு காரணமாக நக்சலிசம் அதன் இறுதி மூச்சை விட்டுக் கொண்டிருக்கிறது.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 12ல் இருந்து 6 மாவட்டங்களாக குறைக்கப்பட்டுள்ளன. இதுதான் பயங்கரவாதத்திற்கு எதிரான புதிய இந்தியாவின் இரும்புக்கரம் அணுகுமுறை. மார்ச் 31, 2026க்குள், இந்தியா 100% நக்சலைட் இல்லாததாக மாறும்: என்று தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை செம்பனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நூற்றாண்டு விழா மற்றும் ஆண்டு விழா நிகழ்வு



சிவகங்கை, ஏப்.2

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் செம்பனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நூற்றாண்டு விழா மற்றும் ஆண்டு விழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

முன்னாள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் சார்பில் பள்ளிக்குத் தேவையான உபகரணங்களை மேல தாளத்துடன் சீர்வரிசை போல் கொண்டு செல்லப்பட்டது.

மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் பள்ளியின் ஆண்டு அறிக்கையும் விளையாட்டில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் உயர் கலை கதிரவன் மாவட்ட ஒன்றிய கல்வி அலுவலர்கள் தலைமையாசிரியர் ஆசிரியர்கள் அங்கன்வாடி பணியாளர்கள்முன்னாள் மாணவர்கள் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இவ்விழாவை முன்னாள் மாணவர்கள் ஏற்பாடு செய்தனர்.







சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே கல்லல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வாசு தலைமையில் மக்களின் தாகம் தீர்க்கும் நீர்மோர் பந்தல் திறப்பு விழா ஒன்றிய அலுவலகத்தில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் தேர்போகி பாண்டி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமமுக நெசவாளரணி தலைவர் அம்சக்கண்ணன் மாவட்ட துணை செயலாளர் சோமசுந்தரம், காரைக்குடி பொதுக்குழு உறுப்பினர் பழனி பெரியசாமி, மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச்செயலாளர் பந்தா பாண்டி, மாவட்ட இளம்பெண் பாசறை துணை செயலாளர் தம்பி செல்வா, தட்டட்டி ஊராட்சி கழக செயலாளர் ஏ ஆர் காமராஜ்,மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சென்னை தெற்கு மாவட்ட புனித தோமையார் மலை ஒன்றிய தி.மு.க இளைஞர் அணி சார்பில் முதலமைச்சர் ஸ்டாலின் பிறந்தநாள் விழா



மேடவாக்கம் ஏப்.2

சென்னை தெற்கு மாவட்ட புனித தோமையார்மலை தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மேடவாக்கத்தில் புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர், ஆர்.எஸ் .லோகேஸ்வரா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

தலைமை பொதுகுழு உறுப்பினர், மேடவாக்கம், ப.ரவி அவர்கள் வரவேற்றார். வாழ்த்தரங்கம் மற்றும் 2000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மேடவாக்கம் சந்திப்பில் 28.03.25. வெள்ளிக்கிழமை, மாலை 6:00 மணிக்கு நடைபெற்றது.நல்லத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புறையாற்றிய சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான,மா.சுப்பிரமணியன் மற்றும் உணவு மற்றும் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி , சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், ச. அரவிந்த் ரமேஷ் , விருகம்பாக்கம் சட்டமன்றஉறுப்பினர், ஏ.வி.எம் .பிரபாகராஜா, ஒன்றிய கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஓ.கே.எஸ்.சதீஷ் , சென்னை மாநகராட்சி கல்வி குழு தலைவர் பாலவாக்கம், விஸ்வநாதன், மாவட்ட துணை செயலாளர், பாலவாக்கம், மு.மனோகரன் 14 வது மண்டல குழு தலைவர் பெருங்குடி, எஸ்.ரவிச்சந்திரன் தலைமை பொதுக்குழு உறுப்பினர், அரிகிருஷ்ணண் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், வார்டு உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## பாஜக சீராய்வு பொறுப்பாளர்கள் பெரியகுளம் நகர் பகுதியில் ஆய்வு





பெரியகுளம் ஏப்.2

தேனி மாவட்டம் பெரியகுளம் நகர் பகுதியில் பாரதிய ஜனதா கட்சி கிளை சீராய்வு நடைபெற்றது. இந்த ஆய்வு மாவட்டத்தலைவர் ராஜபாண்டியன் தலைமையில் மாவட்ட கிளை சீராய்வு பொறுப்பாளர்

வினோத்குமார், மண்டல சீராய்வு பொறுப்பாளர் சிவகுமார், மண்டல தலைவர் (நகர தலைவர்) திவ்யா ராஜசேகர், பாராளுமன்ற முழு நேர ஊழியர் முருகன், மண்டல துணை தலைவர் நாராயணன், நகர பொது செயலாளர்கள் சோமசுந்தர சரவணன், வீரபத்திரன், நகர பொருளாளர் ராஜசேகர், கிளை தலைவர்கள் நகர் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர். சீராய்வு செய்த படிவத்தை மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## மாடம்பாக்கம் ஐக்கிய நாடார் சங்கத்தில் ஏழாம் ஆண்டு குடும்ப விழா



சென்னை ஏப்.2

சென்னை மாடம்பாக்கத்தில், மாடம்பாக்கம் ஐக்கிய நாடார் சங்கத்தில் ஏழாம் ஆண்டு குடும்ப விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.. நிகழ்ச்சிக்கு மாடம்பாக்கம் ஐக்கிய நல சங்க தலைவர் எஸ்.அந்தோணி நாடார் தலைமை தாங்கினார். நாடார் பாதுகாப்பு பேரவை நிறுவன தலைவர் இ.எம். சீனிவாசன் நாடார் முன்னிலை வகித்தார்.

இதில் சிறப்பு விருந்தினராக முன்னாள் பாஜக தலைவர் தமிழிசை சௌந்தர்ராஜன, தமிழக பனைமர தொழிலாளர்கள் நல வாரியம் தலைவர் எர்னாவூர் நாராயணன் மற்றும் முன்னாள் அதிமுக அமைச்சர் மாபா.பாண்டியராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் கல்வியில் சிறந்த மாணவ மாணவர்களுக்கு கேடயம் மற்றும் ரொக்க பரிசினை சிறப்பு விருந்தினர்கள் வழங்கி மாணவர்களை பாராட்டினர். நிகழ்ச்சியில் பேசிய தமிழக முன்னா பாஜக தலைவர் தமிழிசை சௌந்தர்ரஜன் கூறும்போது, காமராஜர் வழியில் தான் பதவியின் மீது ஆசை இல்லாமல் தன்னுடைய செல்வாக்கான ஆளுநர் பதவியை கூட துறந்ததாகவும் தெரிவித்தார். நாடார் சமூகம் என்றாலே உழைப்பு பெயர் பெற்ற சமூகம் அந்த சமூகத்தில் இருந்து வந்தநான் உழைப்பால் தான் உயர்ந்துள்ளேன் என தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மா.பாண்டியராஜன் பேசுகையில், அதிமுக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா காமராஜரையும், நாடார் சமூகத்தை பெருமை படுத்தும் விதமாக இருமுறை என்னை கல்வி துறை அமைச்சராக நியமித்தார் என பெருமிதம் கொண்டார்.

இந்தநிகழ்ச்சியில் நாடார் பாதுகாப்பு பேரவை தலைவர் சீனிவாசன் நாடார், எம்.எல்.ஏ. பிரபாகரராஜா, பாஜக ஒ.பி.சி. அணி துணை தலைவர் ராதா கிருஷ்ணன், அன்னை வேளாங்கண்ணி கல்வி குழும தலைவர் தேவ் ஆனந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் மாடம்பாக்கத்தை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குடும்பத்துடன் கலந்துப்கொண்டனர். இறுதியாக அனைவருக்கும் பரிசு பொருள் மற்றும் அறுசுவை உணவும் மாடம்பாக்கம் ஐக்கிய நாடார் சங்கம் சார்பில் வழஙகப்பட்டது.

## தென்மாவட்டங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் பங்குனி திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்





இளையான்குடி, ஏப்.2

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே உள்ளது தாயமங்கலம். இங்கு இந்து சமய அறநிலையத்திற்குட்பட்ட பிரசித்தி பெற்ற முத்துமாரியம்மன் கோவில் உள்ளது.

தென் மாவட்டங்களில் புகழ்பெற்ற இந்த கோவிலில் ஆண்டுதோறும் பங்குனி திருவிழா 10 நாட்கள் சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

இந்த திருவிழாவையொட்டி தென் மாவட்டங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் இந்த விழாவில் கலந்துகொண்டு தரிசனம் செய்வார்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இந்த கோவிலில் இந்தாண்டு பங்குனி திருவிழா இரவு 11 மணிக்கு ஸ்ரீவிக்னேஸ்வரர் பூஜையுடன் கொடியேற்றம் நிகழ்ச்சி தொடங்கியது.

அதன் பின்னர் அம்மனுக்கு காப்பு கட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு காப்பு கட்டினார்கள். இதனைத்தொடர்ந்து விழாவின் முக்கிய நிகழ்வான ஏப்ரல் மாதம் 5 ஆம் தேதி பொங்கல் வைபவ நிகழ்ச்சியும் 6 ஆம் தேதி இரவு மின் விளக்கு அலங்காரத்தில் தேரோட்டம் நிகழ்ச்சி நடக்க இருக்கிறது..

7ந்தேதி பால்குடம் உள்ளிட்ட பல்வேறு நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்ச்சியும், மறுநாள் ஊஞ்சல் உற்சவம் மற்றும் இரவு பூப்பல்லக்கு நிகழ்ச்சியும் நடக்கிறது. 10ம் நாள் விழா காலையில் தீர்த்தவாரி உற்சவத்துடன் விழா நிறைவு பெறுகிறது.

## கல்லலில் உலகத் திருக்குறள் கூட்டமைப்பு சார்பாக ஆசிரியைக்கு பாராட்டு



கல்லல், ஏப்.2

சிவகங்கை மாவட்டம் கல்லலில் உலக திருக்குறள் கூட்டமைப்பு கல்லல் கிளைக் கூட்டம் நடைபெற்றது. ஒன்றாம் வகுப்பு மாணவி லக்ஷிதா திருக்குறள் வாழ்த்துப் பாடினார். பேராசிரியை நித்யா வரவேற்புரை ஆற்றினார். இந்த அமைப்பின் மாநிலத் துணைத் தலைவர் புலவர் மெய்யாண்டவர் விழாவிற்கு தலைமை தாங்கி தொல்காப்பியத்தின் மேன்மையைப் பற்றி எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தியாகராசன் வாழ்வியலோடு திருக்குறள் எவ்வாறு பொருந்துகிறது என்று எடுத்துரைத்தார்.

தொல்தமிழனின் மிகப் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியத்தை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் விதமாக பெங்களூருவை சேர்ந்த ஷியாம்ஸ் மற்றும் கிராப்ட் அகடமி மற்றும் ஆல் இந்தியா புக் ஆப் ரெக்கார்ட் நிறுவனம் சில முன்னெடுப்புகளை செய்து வருகிறது . அதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டையில் தொல்காப்பியரின் உருவப்படத்தை வரைந்து அதில் தொல்காப்பியத்தில் உள்ள 1610 நூற்பாக்களையும் 41 பேர் தமிழிலும், 4 பேர் ஆங்கிலத்திலும் தொடர்ந்து 39 மணி நேரம் எழுதி சாதனை படைத்தனர். இந்த நிகழ்வில் 13 வயது பள்ளி மாணவர்கள் முதல் 70 வயது பெரியவர்கள் வரை தன்னார்வத்துடன் பங்கேற்றனர். தமிழில் எழுதியவர்களுள் 3 பேர் புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஒன்றியம் கைக்குறிச்சி புதுக்கோட்டை அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியை சார்ந்த தமிழாசிரியைகள் பாண்டியம்மாள், புனிதா மற்றும் நித்யா ஆவர். இதில் சிவகங்கை மாவட்டம் கல்லலைச் சார்ந்த ஆசிரியை பாண்டியம்மாளுக்கு இந்த அமைப்பின் சார்பாக கல்லலில் பாராட்டு விழா நடைபெற்றது. ஆசிரியர்கள் கண்ணதாசன் மற்றும் முருகன் வாழ்த்திப் பேசினர்.

கல்லல் பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி மாணவர் கவி பாரதி மற்றும் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளி மாணவி திரிஷா திருக்குறள் ஒப்புவித்தனர். மாவட்டப் பொறுப்பாளர் பிரபு விழாவிற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 41வது வார்டுக்குட்பட்ட வட்ட விளை அரசு நடுநிலைப் பள்ளியில் ரூ 3.60 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்பு பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். உடன் மாமன்ற உறுப்பினர் . அனிலா மண்டல தலைவர். அகஸ்டினா கோகிலவாணி மாநகர செயலாளர் . ஆனந்த் செயற்குழு உறுப்பினர் .சதாசிவம் பகுதி செயலாளர் துரை உதவி செயற் பொறியாளர் .ரகுராம் உதவி பொறியாளர் சுஜின் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மாநகராட்சி அலுவலர்கள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கொடைக்கானல் மன்னவனூர் ஏரி பகுதி பாரமாரிப்பு பணி சுற்றுலா பயணிகளுக்கு தற்காலிக அனுமதி மறுப்பு




கொடைக்கானல் ஏப்.2

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் சர்வதேச சுற்றுலா தளங்களில் ஒன்றாகும் இந்நிலையில் கொடைக்கானலில் சுற்றுலா பயணிகளை காண பல்வேறு சுற்றுலா தளங்கள் உள்ளன

இந்நிலையில் கொடைக் கானல் கிராம சுற்றுலா தளமான மன்னவனூர் பகுதி யில் சுற்றுலாப் பயணிகளுக்கு கண்களை கவரும் விதமாக மன்னமனூர் ஏரி அமைந் துள்ளது

ஏரியில் பரிசல் சவ்வாரி மற்றும் ஜிப் லைன் போன்ற பொழுதுபோக்கு சுற்றுலா பயணிகளுக்கு இருந்து வருகிறது. இந்நிலையில் கோடை சீசன் தொடங்க இருப்பதன் காரணமாக சுற்றுலா பயணிகளின் நலன் கருதி மனனமனூர் ஏரி பராமரிப்பு பணி நடைபெறும் காரணமாக நாளை முதல் நான்கு நாட்களுக்கு சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி இல்லை என்று கொடைக்கானல் மன்னவனூர் வன சரகம் அலுவலர்கள் தெரிவித்தனர்.

# திருப்பூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் மாணாக்கர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி! ஆட்சியர் தகவல்

திருப்பூர், ஏப்.2

திருப்பூர் மாவட்டத்தில் 12 ஆம் வகுப்பு முடித்த பள்ளி மாணவ, மாணவியர்கள் அனைவரும் 100% கல்லூரியில் சேர வேண்டும்.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 2024-2025 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணாக்கருக்கு உயர் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறம் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனைத் தொடர்ந்து, இன்றையதினம், ஆதிதிராவிடர் நல்ததுறையின் சார்பில் 2024 2025 ஆம் கல்வியாண்டில் 12 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணாக்கர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றுது.

மாணாக்கரின் உயர்கல்வி சேர்க்கை விகிதத்தினை உயர்த்துவதை இலக்காகக் கொண்டு 12 ஆம் வகுப்பு பயின்று வரும் மாணாக்கருக்கு



தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அதிகமுள்ள படிப்புகள் மற்றும் அப்படிப்புகளை வழங்கும் உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தன்னார்வ இயக்கம் பிற தன்னார்வ இயக்கங்களுடன் இணைந்து கல்லூரி கனவு உயர்கல்விக்கான வழிகாட்டி நிகழ்ச்சிநடைபெற்று வருகிறது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணாக்கருக்கு வழிகாட்டு ஆலோசனை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டத்தை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயின்று கல்லூரிக்கு செல்லும் மாணவ, மாணவியர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் கல்லூரி செல்லும் மாணவ, மாணவியர்களின் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு அரசு பள்ளிகளில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 97.45% தேர்ச்சி அடைந்து திருப்பூர் மாவட்டம் தமிழ்நாட்டில் முதலிடம் பெற்றுள்ளது. மேலும், சென்றாண்டு 12 ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி அடைந்த 97% பேர் கல்லூரியில் சேர்ந்து பயின்று வருகிறார்கள். அதே போல் இந்தாண்டு 12 ஆம் வகுப்பு முடித்த மாணவ, மாணவியர்கள் 100% உயர்கல்வி செல்ல வேண்டும்.

மேலும், இந்நிகழ்ச்சியின் மூலம் உயர்கல்வி வழிகாட்டி கருத்துரையாளர்கள் மாணவ, மாணவியர்கள் என்ன உயர்கல்வி பயில வேண்டும் எந்தெந்த பணிகளுக்கு செல்ல முடியம் என விரிவாக எடுத்துரைப்பார்கள். இந்த சிறந்த வாய்ப்பை அனைத்து மாணவ, மாணவியர்களும் பயன்படுத்தி 100% உயர்கல்வியில் சேர வேண்டும். என மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஷ்பா தேவி, உயர்கல்வி வழிகாட்டி கருத்துரையாளர்கள் எ.பெலிக்ஸ், சிரிஜித் சுந்தரம், உதவி திட்ட அலுவலர் (பள்ளிக் கல்வித்துறை) அண்ணாத்துரை, தனி வட்டாட்சியர்கள் (ஆதி திராவிடர் நலத்துறை) தேவராஜ், நந்தகோபால் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் மேற்கு பகுதியில் திமுக சார்பில் நீர்மோர் பந்தல்



தாம்பரம், ஏப்.2

தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு துணை முதலமைச்சர் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆலோசனைக்கிணங்க கோடைக்காலத்தில் பொது மக்களின் தாகத்தை தணிக்கும் வகையில் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தண்ணீர் பந்தலை, திறந்து வைத்து நீர்மோர், இளநீர், குளிர்பானம், தர்பூசணி, ரோஸ்மில்க் ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார் இந்நிகழ்வில் 5வது மண்டல குழு தலைவரும், தாம்பரம் மேற்கு பகுதி செயலாளருமான எஸ்.இந்திரன், தலைமை கழக பேச்சாளர் கி.வேல்மணி தாம்பரம் மேற்கு பகுதி அவைத்தலைவர் வீ.முனுசாமி, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வி.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியம், பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், மாநகர அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதி இளைஞரணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

# காரைக்குடி தாலுகா சாக்கோட்டை காலனி அருகே ரேசன் அரிசி கடத்திய வாகனம் பறிமுதல்

காரைக்குடி, ஏப்.2

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா சாக்கோட்டை காலனி அருகே சிவகங்கை சிஎஸ்சிஐடி பிரிவு குழுவினர் சோதனையில் ஈடுபட்ட போது அவ்வழியே வந்த டாடா சுமோ வாகனத்தை (பதிவு எண் கொண்ட வாகனத்தில் (TN 72 R 6637) சோதனை செய்தனர் அதில் 30 மூட்டைகள் பிடிஎஸ் அரிசி, ஒவ்வொன்றும் 40 கிலோ, மொத்தம் 1200 கிலோ பிடிஎஸ் அரிசி இருந்தது. மேலும் காவல் துறையினர் விசாரணையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் கீழத்தூவல், மகிண்டி, சவராயர்பட்டினம், சூரங்குவல் ஆகிய கிராமங்கள் உட்பட பல்வேறு இடங்களில் பி.டி.எஸ் அரிசியை சேகரித்தது தெரியவந்தது.

அதை கருப்பு சந்தையில் அதிக விலைக்கு விற்றதாக கூறப்படுகிறது. வாகன ஓட்டுநர் மற்றும் வசூல் செய்பவர் ராமநாதபுரம் மாவட்டம் முத்துக்கழுத்தூர் டி.கே கீழத்தூவல் சேர்ந்த காளிதாஸ் (23),வாகனம் மற்றும் அரிசி உரிமையாளர் இராமநாதபுரம் மாவட்டம்




முதுகுளத்தூர் கீழத்தூவல் சேர்ந்த செல்லம் (37) ஆகியோரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஈரோட்டில் புதிய போலீஸ் சூப்பிரண்டு



ஈரோடு ஏப்.2

போலீசார் தங்களது பணியை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதிய போலீஸ் சூப்பிரண்டு சுஜாதா கூறினார்.

ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டாக பணியாற்றிய ஜி.ஜவகர், சென்னை வடக்கு மண்டல சி.பி.சி.ஐ.டி. போலீஸ் சூப்பிரண்டாக பணி இடமாற்றம் செய்யப் பட்டார். இதையடுத்து திருப்பூர் சட்டம் ஒழுங்கு துணை கமிஷனராக பணியாற்றி வந்த ஏ.சுஜாதா, ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பி ரண்டாக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் ஈரோடு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் கோப்புகளில் கையெழுத் திட்டு, ஈரோடு மாவட்ட புதிய போலீஸ் சூப்பிரண்டாக சுஜாதா பொறுப் பேற்றுக்கொண்டார்.

# சிவகங்கையில் ரம்ஜான் பெருநாளை முன்னிட்டு சிறப்பு தொழுகை



சிவகங்கை ஏப்.2

உலகம் முழுவதும் இன்றைய தினம் ரம்ஜான் பெருநாளை முன்னிட்டு மசூதிகளில் சிறப்பு தொழுகை நடத்தப்பட்டு வருகிறது. அதேபோல் சிவகங்கை மதுரை சாலையில் உள்ள ஈகா மைதானத்திலும் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.இதில் ஏராளமான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு, நோன்பு முடிவடைந்ததை அனுசரித்து இறை வழிபாடு செய்தனர். இஸ்லாமிய நம்பிக்கையின்படி, முகம்மது நபிக்கு முதன் முதலில் குரான் வெளிப்படுத்தப்பட்ட மாதமாக ரமலான் கருதப்படுகிறது. இம்மாதம் முழுவதும், தினமும் பின்னிரவில் உணவருந்தி, சூரியன் மறையும்வரை நோன்பு மேற்கொள்ளப்பட்டது.

30வது நாளில் பிறை தெரிந்த வுடன், ரம்ஜான் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்படும் வழக்கம் உள்ளது. அதன்படி, நேற்று முன்தினம் அனைத்து வயது மக்களும் புத்தாடைகள் அணிந்து, இறை வழிபாட்டில் ஈடுபட்டனர். தொழுகை முடிந்தபின், ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி ரம்ஜான் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் 1000க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.




சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் சார்பில் மாவட்ட செயலாளர் முத்துபாரதி ஆலோசனைப்படி மானாமதுரை நகர் செயலாளர் நம்பிராஜன் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு காலை உணவு நேற்று வழங்கப்பட்டது. உடன் இணைச் செயலாளர் ராஜேஷ் கண்ணண், பொருளாளர் அங்கயர் குமார் ,துணைச் செயலாளர் மூர்த்தி மற்றும் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# கோட்ட துறை பஞ்சாயத்தில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக கழக கொடியேற்று விழா-நலத்திட்ட உதவிகள்


பழனி ஏப்.2

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் கோட்டத்துறை பஞ் சாயத்து பெருச்சிபாளையம் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பாக கொடி ஏற்றும் நிகழ்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மிகப் பிரமாண்டமாக நடைபெற்றது.

கொடியேற்றம் நிகழ்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கு திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன். தலைமை தாங்கினார் மற்றும் மாவட்ட நிர்வாகி விஜய் சிவா. மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் முன்னிலை வகித்தார்

தொப்பம்பட்டி ஒன்றிய தலைமை மணிகண்டன் தொப்பம்பட்டி மேற்கு ஒன்றிய தலைமை நிர்வாகிகளான



வசந்த் குமார் ,விக்னேஷ் யுவராஜ் என்ற கருப்புசாமி, பழனி குமார் , செல்வம் களப்பணியாற்றி விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

கழகப் பேச்சாளர் கௌதம் மாரிமுத்து எழுச்சி உரையாற்றினார். மற்றும் கழகக் கொடி யேற்றி தலைமை உரை திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன் உரையாற்றினார்.

மேலும் இந்த நிகழ்வில் பொதுமக்களுக்கு விலையில்லா புடவை வழங்கும் நிகழ்வு நடை பெற்றது மாணவ மாணவி களுக்கு விலையில்லா நோட்டு புத்தகங்கள்,பேனா ஆகியவை. வழங்கப்பட்டது.தொப்பம்பட்டி ஒன்றியத்தின் 38 பஞ்சாயத்தை சேர்ந்த கிளை நிர்வாகிகள் அனைவருக்கும் கட்சி வேட்டி வழங்கப்பட்டது..



தமிழக முதல்வர் ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை கே.கே.நகர் 33 வது வட்டகழக திமுக சார்பில் ஆயிரம் குடும்பங்களுக்கு நலத்திட்டம் வழங்கும் விழா வட்ட கழக செயலாளர் ராஜேஷ் கண்ணா மாமன்ற உறுப்பினர் மாலதிகா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட செயலாளர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் பொன். முத்துராமலிங்கம், வேலுச்சாமி, குழந்தைவேலு, ஜெயராம், மேயர் இந்திராணி பொன்வசந்த், சரவணா புவனேஸ்வரி, மகாலட்சுமி ,ஒச்சுபாலு சின்னம்மாள் உள்ளிட்ட கழகநிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்




மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மேயர் இந்திராணி பொன்வசந்த் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டார் அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், மண்டலத் தலைவர் .சரவணபுவனேஸ்வரி , உதவி ஆணையாளர் கோபு மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தாம்பரத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்



தாம்பரம் ஏப்.2

செங்கல்பட்டு மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு 49வது வார்டில் அமைந்துள்ள பாபு மகப்பேறு மருத்துவமனையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி தலைவர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பல்நோக்கு மருத்துவ முகாம் மற்றும் இரத்த தான முகாமிற்கு சிரிப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு மருத்துவ முகாமே தூங்கி வைத்தனர் இந்த நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், காஞ்சிபுரம் மாவட்ட குழு தலைவர் படப்பை மனோகரன், பகுதி கழகச் செயலாளர் தா.ஜெயக்குமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆதிமாறன், தமுமுகவின் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் எம்.யாகூப், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி திமுக சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா மண்ணிசை அரங்கம்





சோழிங்கநல்லூர் ஏப்.2

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி, 31.03.25. திங்கட்கிழமை, மாலை: 5 மணிக்கு, சன்பீம் பள்ளிவளாகம், நீலாங்கரையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா மண்ணிசை அரங்கம், கழக முன்னோடிகளுக்கு, பொற்கிழி வழங்குதல் மற்றும் 2072 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை 15 வது மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி செயலாளர் வி. இ. மதியழகன், தலைமை நிகழ்ச்சி ஏற்பாட்டில் தொழில் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர், சி.வி.கணேசன் அவர்கள் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மண்ணிசை அரங்கம் "இனமானம் காக்கும் ஈடுபட்டோர்" படைவீரர் மண்ணிசை பாடகர்கள் மகிழினி மணிமாறன், செல்லாங்குப்பம் சுப்பிரமணி, பாட்டு குயில் கண்ணகி, கிராமிய பாடகர் குரு மன்னிசை அரங்கம் சிறப்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை தெற்கு மாவட்டம் கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருமான, மா.சுபிரமணியன் தலைமையில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் நிகழ்ச்சிக்கு சிறப்பாக பொறுப்பேற்று இருக்கிற முன்னாள் மாவட்ட கழக செயலாளர், எட்டியப்பன், வரவேற்புரையாக கே. குமார் வரவேற்று சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர், மனோகரன், அவைத்தலைவர், குணசேகரன், தலைமை தலைமை பொது குழு உறுப்பினர்கள் பாலவாக்கம். விஸ்வநாதன் , அரிகிருஷ்ணன், 14 வது மண்டல குழு தலைவர், ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர், விருகம்பாக்கம், எம்.எல்.ஏ.பிரபாகரராஜா மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜே.இ.பாண்டியன் பாண்டியன், கா.வி.தியாகராஜன், புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன், 195 வது மாமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் உள்ளிட்ட தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி ,ஒன்றிய, ஊராட்சி, கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி கட்சியின் வளர்ச்சிக்கு காரணமான 116 கழக மூத்த முன்னோடிகளை மேடையில் அமர்த்தி பாராட்டி கௌரிவித்தனர். அறிஞர் அண்ணாவிற்கு 1963 லிருந்து 1967 வரை கார் ஓட்டுவாராக இருந்த சக்கரபாணிக்கு அமைச்சர் பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரயில் நிலையத்திலிருந்து பல்வேறு தெருக்களுக்கு போகக்கூடிய பாதைகளில் இரு மரங்களால் மக்கள் அவதி! வாகனங்களில் முடியாமல் மக்கள் திண்டாட்டம்

மானாமதுரை ஏப்.2

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில் நிலையப் பகுதியில் இருந்து நகராட்சிக்கு உட்பட்ட வெள்ளையன் தோப்பு தெருவிற்கு செல்லக்கூடிய பகுதி மற்றும் இந்தப் பகுதியின் வழியாக மட்டும் பல்வேறு தெருக்களுக்கு செல்லக்கூடிய குறுகிய வளைவுப் பகுதியில் மரங்களால் விபத்து ஏற்பட அபாயம் ஏற்பட்டுள்ளது.

உடனடியாக மரங்களை அகற்ற பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் .



மானாமதுரை ரயில் நிலையத்திலிருந்து வெள்ளையன் தோப்பு வழியாக செல்லும் குறுகிய வளைவு பாதையில் மரங்கள் இருப்பதால் இந்த பகுதியில் இருந்து ரயில்வே காலனி, விநாயகர் தெரு,பர்மா காலனி , ஜீவா நகர் , சியோன் நகர் ஆதனூர் சாலை உட்பட பல்வேறு தெருக்களுக்கு இந்த வழியாகத்தான் சென்று வர முடியும் குறிப்பாக ஆட்டோக்கள் அதிகமாக இந்த வழியாக தான் செல்கிறது ஒரு பக்கம் செல்லும்போது போது எதிரே இருசக்கர வாகனங்களோ ஆட்டோக்கள் வந்தால் ஒன்று விபத்து ஏற்ப அபாயம் அல்லது நெருக்கடி ஏற்படும் அபாயமும் உள்ளது இந்தப் பகுதியில் ரயில்வே இடமும் வருவதால் ரயில்வே நிர்வாகமும் மரத்தை அகற்ற முன்வருவதில்லை இதே பகுதியில் நகராட்சி இடமும் அந்த இடத்தில் நகராட்சி நிர்வாகம் சார்பில் பேவர் பிளாக் கல் சாலையும் தற்போது அமைக்கப்பட்டுள்ளது உடனடியாக நகராட்சி நிர்வாகம் அல்லது ரயில்வே நிர்வாகமும் இந்த மரங்களை அகற்ற வேண்டும் எனவும் கோரிக்கை எழுந்துள்ளது இந்த பகுதியில் தினந்தோறும் இருசக்கர வாகனங்களில் 500 க்கும் மேற்பட்டோர் மற்றும் ஆட்டோக்களில் இந்த வழியாகத்தான் பயணம் செய்து வருகின்றனர் மரத்தை அகற்றும் பட்சத்தில் விபத்தை தவிர்க்க முடியும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்

இது குறித்து அந்தோணி என்பவர் கூறுகையில் ரயில் நிலையத்திலிருந்து இந்த பகுதி வழியாக தான் பல்வேறு தெருக்களுக்கு சென்று வருகின்றனர் ஆனால் இருவர் கூட வாகனங்களில் செல்ல முடியாது என்றும் இந்த மரங்களால் அதிவேகமாக வரும் பொழுது மரத்தில் மோதி விபத்து ஏற்பட வாய்ப்பும் உள்ளது ஒருபக்கம் ஆட்டோக்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் வந்தால் இன்னொரு பக்கம் நிற்க வேண்டிய சூழ்நிலை உள்ளது இரு மரங்களை அகற்றி விட்டால் போக்குவரத்துக்கு எந்த ஏதும் பிரச்சனையும் ஏற்படாது எனவும் தெரிவித்தார் ரயில்வே நிர்வாகமும் நகராட்சி நிர்வாகமும் உடனடியாக முடிவெடுத்து உடனடியாக மரங்களை அகற்றவும் கோரிக்கை விடுத்துள்ளனர்..

# செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம்சார்பில் 13 நாட்கள் சிறப்பு பயிற்சி எதிரொலியாக தமிழக அணியினர் வெண்கல பதக்கம் வென்று அசத்தல்

தாம்பரம் ஏப்.2




செங்கல்பட்டு மாவட்டம் தேசிய அளவிலான சப் ஜூனியர் பெண்கள் கபடி போட்டியில் தமிழக அணியினர் வெண்கல பதக்கம் வென்று அசத்தல் வெற்றி பெற்றுள்ளனர்.

பீகார் மாநிலத்தில் தேசிய அளவிலான சப் ஜூனியர் பெண்கள் கபடி போட்டி கடந்த மார்ச் 26ம் தேதி முதல் 30ம் தேதி வரை நடைப்பெற்றது. இதில் 28 மாநிலத்தை சேர்ந்த அணிகள் கலந்துகொண்டது. தமிழகத்தை சேர்ந்த பெண்கள் அணியும் பங்கேற்றன. இதில் தமிழகத்தை சேர்ந்த பெண்கள் கபடி அணியினருக்கு செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் 13 நாட்கள் சிறப்பு பயிற்சி ஒ.எம்.ஆர்.சாலையில் உள்ள செயின்ட் ஜோசப் கல்லூரியில் வழங்கப்பட்டது. சிறப்பாக பயிற்சியின் காரணமாக தமிழக கபடி வீராங்கனைகள் தேசிய அளவிலான போட்டியில் தங்கள் திறமைகளை வெளிப்படித்தி தமிழ்நாட்டிற்காக சிறப்பாக விளையாடி வெண்கல பதக்கம் வென்றனர்.

பதக்கம் வென்று சென்னை திரும்பிய தமிழக பெண் கபடி வீரர்களுக்கு சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு அமைச்சூர் கபடி கழகம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

வெற்றி பெற்று சென்னை திரும்பிய வீராங்கணைகளுக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா மற்றும் செங்கல்பட்டு மாவட்ட கபடி கழக செயலாளர் மு.வேல்முருகன், செங்கல்பட்டு மாவட்ட கபடி கழக தலைவர் சிவமணி ஆகியோர் மாலை மற்றும் சால்வை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தனர்.

தேசிய அளவிலான கபடி போட்டியில் பங்கேற்ற உள்ள தமிழக பெண்கள் கபடி அணியினருக்கு செங்கல்பட்டு மாவட்ட அமெச்சூர் கபடி கழகத்தின் மாவட்ட செயலாளர் மு.வேல்முருகன், தலைவர் சிவமணி ஆகியோர் சிறப்பு பயிற்சி அளிக்க முடிவு செய்தனர். அதன் மாவட்ட அமெச்சூர் கபடி கழகம் சார்பில் சென்னை ஒ.எம்.ஆர்.சாலையில் உள்ள செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் 13 நாட்கள் பெண்கள் கபடி அணியினருக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டது.

13 நாட்கள் சிறப்பு பயிற்சியில் கலந்து கொண்ட வீராங்கனைகள் தேசிய அளவிலான போட்டியில் கலந்து சிறப்பாக முடிந்தது. கொண்டதால் விளையாட அதன் காரணமாக பீகாரில் நடந்த போட்டியில் தங்களது சிறப்பாக திறமையை வெளிப்படுத்தி பதக்கம் வெல்ல முடிந்ததாக தமிழக அணியிம் கேப்டன் காவ்யா தெரிவித்துள்ளார்.

மேலும் போட்டியில் வெற்றி பெற்று சென்னை திரும்ப தாம்பரம் சட்டமன்ற எஸ்.ஆர். ராஜா உறுப்பினர் தனது சொந்த நிதியில் இருந்து அனைத்து வீரர்களுக்கு விமான டிக்கெட் எடுத்து கொடுத்தகாவும் தமிழக அணியின் கேப்டன் காவ்யா கொண்டார்.

# மதுரையில் உள்ள பள்ளிவாசல்களில் ரம்ஜான் சிறப்பு தொழுகை

மதுரை ஏப்.2



மதுரையில் ஆண்டுதோறும் வரும், மற்ற மாதங்களைக் காட்டிலும், ரம்ஜான் பெருநாள் வரும் மாதமே இஸ்லாத்தில் சிறந்த மாதமாகக் கருதப்படுகிறது, இந்த மாதம் இறைவனை நெருங்கும் மாதமாகவும், சொர்க்க வாசல்கள் திறக்கப்பட்டு, நரக வாசல்கள் மூடப்படும் மாதமாகவும், நன்மைகள் அதிகம் கிடைக்கும் மாதமாகவும் இஸ்லாமியர்கள் கருதுகின்றனர். நன்மை, தீமைகளைப் பிரித்து அறிவிக்கும் குர்ஆன் உலகிற்கு இறைவனால் வழங்கப்பட்டதும் இந்த மாதம் என்பதால் இந்த மாதம் முழுவதும் நோன்பு இருந்து ரம்ஜான் பண்டிகையினை இஸ்லாமியர்கள் கொண்டாடுகின்றனர்,

புனித ரமலான் மாதமான நேற்றுடன் நோன்பு முடிவடைந்த நிலையில் ரம்ஜான் ஈகைப் பெருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது, ரம்ஜான் சிறப்பு தொழுகை அரசரடி

யு சி பள்ளி மைதானத்தில் உள்ள திடலில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் தெற்கு மாவட்ட தலைவர் சேக் இப்ராஹிம் தலைமையிலும், மாவட்ட பொருளாளர் அப்துல் ஹமீது,

கிளைத் தலைவர் ஹக்கீம் சரீவ்ப் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற, இந்நிகழ்வில் கழகத்தின் உறுப்பினர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள், மகளிர் அணி என 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், அதனைத் தொடர்ந்து பைபாஸ் பகுதியில் உள்ள துரைசாமி நகர் பள்ளிவாசலில் தலைவர் சாகுல் அமீது அவர்கள் தலைமையிலும், பொருளாளர் சம்சுதீன் சையது கான், செயலாளர் முகம்மது இப்ராம்ஷா ஆகியோர் முன்னிலையில், சிறப்பு தொழுகை நடைபெற்றது,

இந்நிகழ்வில் பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாம் பெருமக்கள் கலந்து கொண்டனர், அதனைத் தொடர்ந்து தெற்குவெளி வீதியில் உள்ள மீனாநூர்தீன் பள்ளிவாசலில் தலைவர் ராஜா உசைன், செயலாளர் சாகுல் ஹமீது, பொருளாளர் முகமது கான்சா ஆகியோர் தலைமையிலும், தலைமை இமாம் குத்புதீன் முன்னிலையில் சிறப்பு தொழுகை நடைபெற்றது, இந்நிகழ்வில் அப்பகுதியைச் சார்ந்த இஸ்லாம் பெருமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், அதனைத் தொடர்ந்து பெரியார் பகுதியில் உள்ள காஜிமார் பள்ளிவாசலில் அரசாங்க டவுன் ஹாஜியார் சையது காஜா மெய்னுதீன் தலைமையிலும், காஜிமார் பள்ளிவாசல் இமாம் சையது அலி முல்லா முன்னிலையிலும் சிறப்பு தொழுகை நடைபெற்றது, இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாம் பெருமக்கள் கலந்து கொண்டனர், சிறப்பு தொழுகையில் புத்தாடைகள் அணிந்து, பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட ஏராளமான இஸ்லாமியர்கள் சிறப்பு தொழுகையில் பங்கேற்று இஸ்லாமியர்கள், ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி ரம்ஜான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்,

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161